# ஐக்கியதீபம்

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் வெளியீடு

மலர் 25 | யாழ்ப்பாணம் | 1970 தை | இதழ் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான புத்தகங்களும் பத்திரங்களும்

கீழே காட்டப்பட்டிருக்கும் பட்டியலிலுள்ள புத்தகங்களும், பத்திரங்களும் எங்களிடம் விற்பனைக்கிருக்கின்றன. தங்கள் தேவைகளை எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்

| | | | ரூபா-சதம் |
|---|---|---|---|
| 1. | கடன் மனுப்பத்திரம் | ... ... | -03 |
| 2. | கடன் முறி | ... ... | -03 |
| 3. | மத்தியஸ்தர் மனு | ... ... | -03 |
| 4. | கேள்விப் பத்திரம் | ... ... | -03 |
| 5. | அங்கத்தவர் பாஸ்புத்தகம் (நாணய சங்கம்) | | -25 |
| 6. | ப.நோ.கூ.ச. ,, | ... ... | -50 |
| 7. | அங்கத்தவர் பேரேடு | ... | 7-25 |
| 8. | பொதுப் பேரேடு (நாணய சங்கம்) | ... | 3-50 |
| 9. | ,, ,, (பண்டசாலை) | .... ... | 6-00 |
| 10. | கடன் இடாப்பு | ... ... | 3-00 |
| 11. | அங்கத்தவர் இடாப்பு | ... | 1-50 |
| 12. | காசுப்புத்தகம் (நாணய சங்கம்) | | 5-00 |
| 13. | ,, (பண்டசாலை) | .... ... | 7-00 |
| 14. | சிட்டைப்புத்தகம் பண்டசாலை 20/1 | ... | 3-25 |
| 15. | ,, 18/1 | ... | 7-00 |
| 16. | மனேஜர் பிணைப்பத்திரம் | ... ... | -20 |
| 17. | பொருள் பேரேடு (பண்டசாலை) | ... | 6-00 |
| 18. | அங்கத்தவர் மனுப்பத்திரம் | ... ... | -03 |
| 19. | பங்கு இடாப்பு | ... ... | 3-50 |
| 20. | பங்குப் பணச் சிட்டை | ... . | 1-00 |
| 21 | விலைபொருள் இடாப்பு | ... | 3-50 |
| 22. | உப-விதிகள் ப.நோ.கூ. சங்கம் | ... | -40 |
| 23. | விவசாயக் கடன் மனுப்பத்திரம் | ... | -05 |
| 24. | விவசாயக் கடன் முறி | ... ... | -06 |
| 25. | விவசாயக் கடன்—இணைப்பு i | ... | -03 |
| 26. | விவசாயக் கடன்—இணைப்பு (புத்தகம்) ii | ... | 6-75 |
| 27. | விவசாயக் கடன்—இணைப்பு iii | ... | 3-00 |
| 28. | விவசாயக் கடன்—இணைப்பு iv | . | 3-30 |
| 29. | நெசவுச் சங்க உபவிதி | ... ... | -40 |
| 30. | ப.நோ.கூ.ச. காசுப் புத்தகம் புதியது | ... | 6-00 |
| 31. | விற்பனைச் சிட்டை 8/1 | ... ... | 3-75 |
| 32. | சமாசங்களின் கணக்குமுறை | ... ... | 3-50 |
| 33. | ப.நோ.கூ.ச. சமாச உபவிதி | ... ... | -45 |
| 34. | கடற்றொழிலாளர் கூ.வி. சங்க உபவிதிகள் | ... | -75 |

**வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை**

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 1689

## இந்த இதழில்

ஆசிரியர் தலையங்கம் 3

கூட்டுறவு உலகில் இருதீபங்கள் அணைந்தன 5

மதியரென்ற சொல்லே எம்வனசமாச்சு 6
— பொன் தென்

கூட்டுறவுச் செய்திகள் 7

காமாட்சியம்பாள் கூட்டுறவுக்
கைத்தொழிற் சங்கம் உழைப்பின் சிகரம் 14

யாழ்ப்பாண மாவட்டத்தின்
விவசாயப் பிரச்சினைகள் 21
— J. M. சபாரத்தினம்
மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.

வடபகுதியின் கைத்தொழில் அபிவிருத்தி 27
— A. M. ஆரிய அபேசிங்கி

ஒற்றுமை துன்பத்தில் உற்றதே 30
— வே. ஐயாத்துரை

**அட்டைப்படம்**

**காமாட்சியம்பாள் கூட்டுறவுக் கைத்தொழிற் சங்கத்தின் விற்பனை நிலையம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையற்ற புகையின்பம் தருவது

# J.M.T. ரதி பீடி

காரம், மணம், குணம் யாவும் நிறைந்தது

# J.M.T. ரதி பீடி

சிறந்த புகையிலைக் கலவைகளைக் கொண்டு
கைதேர்ந்தவர்களின் மேற்பார்வையின் கீழ்
தயாரிக்கப்படுவது

## J.M.T. ரதி பீடி

மக்கள் விரும்புவது

## J.M.T. ரதி பீடி

இன்றே வாங்கிப் பாவித்துப் பயனடையுங்கள்
எங்கும் கிடைக்கும்

## J.M.T. ரதி பீடி

உற்பத்தியாளர்கள்:

**யாழ்ப்பாணம் மலையாளம் புகையிலை**
**ஐக்கிய வியாபாரச் சங்கத்துடன்**

உங்கள் தேவைக்கு தொடர்பு கொள்ளுங்கள்

தொலைபேசி இல: **543**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.............

# ஐக்கியதீபம்

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு''

ஆசிரியர்: து. சீனிவாசகம், B. A., J. P.

மலர் 25 | யாழ்ப்பாணம் 1970 தை | இதழ் 5

## யாழ்ப்பாணத்தில் தொழிற்பேட்டை

மாண்புமிகு தொழில் அமைச்சர் பிலிப் குணவர்த்தன அவர்கள் அண்மையில் அச்சுவேலியில் கைத்தொழிற்பேட்டை ஒன்றினை ஆரம்பித்து வைத்தமை யாவருக்கும் பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. இது எக்கலை, பொல்கொல, பூசா ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற பேட்டைகளைப் போன்றதாகும். இப்போது இலங்கையில் நிறுவப்பட்டிருக்கும் தொழிற்சாலைகளில் 79 வீதம் கொழும்பு மாவட்டத்திலேயே நிறுவப்பட்டிருக்கின்றன. இதனைத் தடுத்து இலங்கையின் பல பாகங்களிலும் இருக்கும் தொழில் வசதிகளைப் பயன்படுத்தி ஆங்காங்கு தொழிற்பேட்டைகளை நிறுவுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

யாழ்ப்பாணத் தொழிற்பேட்டையைப் பொறுத்தவரையில் அச்சுவேலியில் அரசுக்குரிய நிலத்தில் 65 ஏக்கர் நிலம் இதற்கென ஒதுக்கப்பட்டிருக்கிறது. முதலாவது திட்டத்தில் எழுபது இலட்சம் ரூபாய் செலவில் மூன்று அளவினைக் கொண்ட முப்பத்தைந்து தொழிற்சாலைக் கட்டிடங்களை நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கின்றது. வீதிகள், தண்ணீர், மின்சக்தி, கழிவுப் பொருள்கள் அகற்றல், தீயணைப்பு ஆதிய சேவைகள் ஒவ்வொரு தொழிற்சாலைக் கட்டிடத்திற்கும் அமைத்துக் கொடுக்கப்படும். இத்திட்டத்தில் நிருவாகப்பகுதிக் கட்டிடமும் பொதுச் சேவைவசதி நிலையமும் நிறுவப்படும் பொதுச் சேவை வசதி நிலையம் அப்பேட்டையிலும் அதற்கு வெளியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடாநாட்டிலுள்ள தொழிலாளர்களுக்கும் உதவியளிக்கக்கூடிய முறையில் அமைக்கப்பெறும். இயந்திரங்களுக்குத் தேவையான பகுதிகள், சாவிகள் ஆதியன செய்வதற்குத் தேவையான எல்லாவகையான கடைச்சல் இயந்திரங்களையும் இச்சேவை நிலையம் கொண்டிருக்கும். நவீன ஆயுதங்கள், இயந்திரங்கள் ஆகியனவற்றை உபயோகிப்பதற்குத் தொழிலாளர்களுக்குப் பயிற்சி கொடுக்கும் நிலையமாகவும் இச்சேவை நிலையம் அமையும் என அறிகிறோம்.

தொழிலாளர்களுக்குத் தொழிற்சாலைக் கட்டிடங்கள் கட்டிக்கொடுக்கப்படுவதுடன், மையப்படுத்தப்பட்ட மற்றைய சேவைகளும் அவர்களுக்கு உதவப்படும். தொழிற்சாலைகளில் நூற்றுக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதுடன் அவற்றிற்கு வெளியில் பலவிதமான தொழில்களுக்கும் அவற்றின் மூலமாகப் பலருக்கு வேலை வாய்ப்புக்களுக்கும் இடமேற்படுகின்றன.

யாழ்ப்பாணத் தீபகற்பம் குடிசனம் கூடிய இடமாக இருப்பதால் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் உடனடியாகத் தீபகற்ப மக்களே வாங்குவதற்கு வசதியளிக்கிறது. உற்பத்திப் பொருள்களின் விற்பனைக்குச் சந்தையிருப்பது அவற்றின் உற்பத்திக்குத் தூண்டுதலாக இருக்குமன்றோ. யாழ்ப்பாண மக்கள் மற்றைய மாவட்டங்களிலும் பார்க்கக் கல்வியறிவு கூடியவர்கள். கூடிய வீதத்தினர் நுண்கலையறிவும் பெற்றுள்ளவர்களாக இருக்கின்றனர். நன்குகவளர்ச்சி பெற்ற யாழ்ப்பாண மக்களது விவசாயம் பல தொழில்களுக்கு மூலப் பொருள்களை வழங்கக் கூடியதாக அமைகிறது. எடுத்துக்காட்டாக பழங்கள் தகரத்தில் அடைத்தல். கனிப்பொருள்கள் குறைவாக இருந்த பொழுதிலும் கறியுப்பை அடிப்படையாகக் கொண்ட பல பொருள்களை உற்பத்தி செய்வதற்கு இடமளிக்கிறது.

மேலே கூறியவற்றிலிருந்து யாழ்ப்பாணத் தொழிற் பேட்டை திறம்பட நடைபெற்று நாட்டின் பல இடங்களிலும் இத்தகைய தொழிற் பேட்டைகள் அமைப்பதற்குத் தூண்டுதலாக இருக்குமென்றும் எதிர்பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு உலகில் இருதீபங்கள் அணைந்தன

கூட்டுறவு உலகில் சேவை புரிந்த திரு. வி. எஸ். பொன்னையா, திரு. ச. சிதம்பரநாதன் ஆகியோர் இவ்வுலக வாழ்வை அண்மையில் நீத்தமை கூட்டுறவாளரைப் பெரிதும் கலங்கச் செய்துள்ளது.

திரு. ச. சிதம்பரநாதன் முன்பு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கூட்டுறவுக் காரியாலயப் பரிசோதகராக சிறப்பான பணிபுரிந்தவர். திரு. வி. எஸ். பொன்னையா கூட்டுறவு ஆக்க ஆணையாளராகப் பணிபுரிந்து இளைப்பாறியபின்பும் கூட்டுறவுத் துறையின் வளர்ச்சிக்காக சிறந்த கூட்டுறவாளர் வரிசையில் மதிகத்தக்க மாண்புடன் தொண்டாற்றினர். அத்துடன் இவர் சிறந்த சமூக சேவையாளர். வ. ஐ. மே. நிருவாகசபையில் இவர் அங்கம் வகித்துவந்தார். யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலையின் அதிபராகவும் இவர் கடமையாற்றியுள்ளார்.

முதன் முதலாக கூட்டுறவுத் திணைக்களப் பகுதியில் கூட்டுறவு உப பரிசோதகர்கள் நியமனம் செய்வதென முடிவுசெய்த காலத்தில் வ. ஐ. மே. சபையின் கீழ் அவர்களின் சம்பளம் முதலியன கொடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதற்கொப்ப மேற்படி சபை 1937ம் ஆண்டு அன்றைய பதிவு காரியஸ்தர் திரு. லூசெற் அவர்களின் சமூகத்தில் நேர்முகப் பரீட்சையை நடாத்தி தெரிவு செய்த நான்கு பரிசோதகர்களில் திருவாளர் வி.எஸ்.பொன்னையா, ச. சிதம்பரநாதன் ஆகியவர்களும் இருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. சிதம்பரநாதன் 2-2-70லும் திரு. வி. எஸ். பொன்னையா 5-2-70லும் இவ்வுலகை விட்டுப் பிரிந்துள்ளார். அவர்களின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் கூட்டுறவாளர்களுக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்து 'ஐக்கிய தீபத்'தை ஏற்றி அன்னார்களை அஞ்சலி செய்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[திரு. மு. மதிபாலசிங்கம் அமரராகி
இரு ஆண்டுகள் நிறைவுறுகின்றன.
அந்நாளின் நினைவாக இக்கவிதையைப் பிரசுரிக்கின்றோம்] —ஆ-ர்.

# மதியரென்ற சொல்லே எம்வசனமாச்சு

**பொன் — தென்**

ஆண்டு இரண்டு அகன்றாலும் அறிஞரேறே
அன்பொழுகும் அருள் ஓசை அசைக்குதெம்மை
மாண்டு நீ போனாய் என்றெவரும் சொன்னால்
மன மதுவோ இல்லையென்று மறுக்குதய்யா
கூண்டிருக்க பசுங்கிளிதான் பறந்தது போல்
கூட்டுறவுக் கூட்டைவிட்டுப் பிரிந்திட்டாயோ
ஆண்டவனின் சந்நிதியில் அடியோருக்காய்
அனுதினமும் வேண்டிடுவாய் அமரரேறே

கருத்தரங்கில் உனைப்பார்த்தேன் காணவில்லை
கருத்து மொழியுரைப்பதற் குப்பேருமில்லை
சிரித்தமுக மதிபாலா சேவையாண்டில்
செல்வமகன் கதை எமக்குச் செப்பி நின்றாய்
தரித்திரத்தைத் தகர்த்தெறிந்த தர்மவேந்தே
தடைகளினைச் சிதறடித்த தளபதியே
திரித்துவத்தின் சந்நிதிக் கோசென்று விட்டாய்
சேவைகள் அத்தனைக்கும் சீட்டு வாங்க

மதிபாலனென்ற மஞ்சு நாமத்துக்கு
மாநகரம் கொழும்பில் வெகு மதிப்பு உண்டு
மதிபாலன் மறைந்த னென்ற செய்தி கேட்டு
மலைத்துநின்றான் வனப்பு மிக்கவன சிங்காவும்
சதிசெய்த தீவினைக்குச் சாந்தியாக
தன்கண்ணீரால் மலர் தீட்டி அனுப்பிவைத்தான்
பதிவிரதாபத்தினிக்கும் பாலருக்கும்
பண்பாளன் அதிமேதை பரந்தஞானி

அதிகாரமென்ற அணு ஆயுதத்தை
அணுவளவும் அணுகாத ஆணையாளா
சதிகாரக் காலன் அவன் வவுனியாவில்
சாற்றிவைத்த ரகசியம் நாம் அறியோமய்யா
மதிபாலசிங்க மென்ற மாமலையே நாம்
மரிக்கு மட்டும் உமை மறவோம், மறவோமய்யா
மதியரென்ற சொல்லே எம் வசனமாச்சு
மாசாந்தி வேண்டுகின்றோம் சாந்தி! சாந்தி!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுச் செய்திகள்

## வடபகுதியில் ஒரு கூட்டுறவு மின்தறி நிலையம்

வடபகுதியில் கூட்டுறவு செழித்து வளர்ந்திருக்குமளவிற்கு கூட்டுறவு அடிப்படையில் தொழிற்சாலைகள் இங்கு நிறுவப்படாதமை பெருங்குறையாக இருக்கின்றது என்றும், இத்துறையில் கூட்டுறவுச் சங்கங்கள் உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும் முயற்சியெடுக்கவேண்டும் என்றும் கூட்டுறவுப் பெரியார்கள் கருத்துத் தெரிவித்து ஊக்கிவருகின்றனர். இங்கு குறிப்பிடத்தக்க பெரிய தொழிற்சாலைகளாக அரசாங்கத்தால் நிறுவப்பட்ட சீமேந்துத் தொழிற்சாலை, பரந்தன் ரசாயன தொழிற்சாலை, ஒட்டுசுட்டான் ஒட்டுத்தொழிற்சாலை ஆகியனவிளங்குகின்றனவே தவிர, கூட்டுறவு அடிப்படையில் இவைபோன்ற தொழிற்சாலைகள் இல்லை. கூட்டுறவு முறையில் தொழிற்சாலைகள் அமைக்கப்படுமேயானல் எத்தனையோ இளைஞருக்கு வேலைவாய்ப்பினை வழங்குவதோடு சிறந்த கூட்டுறவில் வெற்றியையும் கண்டு இப்பகுதியைத் தொழில்வளத்தால் அழகுபடுத்தலாம். எனவே, இன்று தொழிற்சாலைகளை நிறுவி நடாத்துவதே கூட்டுறவுச் சங்கங்களினதும், சமாசங்களினதும் தலையாய முயற்சியாக இருக்கவேண்டும். இம்முயற்சியில் வலிகாமம் மேற்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் இறங்கியதன் விளைவாக மின்தறி நிலையம்ஒன்று தோன்றியிருக்கிறது. கூட்டுறவு முறையில் இப்பகுதியில் அமைக்கப்பட்ட முதலாவது மின்தறி நிலையம் இது என்னும்போது மகிழ்ச்சி பிறக்கிறது. இம்மின்தறி நிலையத்தை அண்மையில் கைத்தொழில், கடற்றொழில் அமைச்சர் மாண்புமிகு பிலிப் குணவர்த்தஞ திறந்துவைத்துள்ளார்.

யாழ்ப்பாண கூட்டுறவு மாகாண வங்கியின் பணவுதவியுடன் 9¼ லட்சம் முத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் ஆரம்பிக்கப்பட்ட இம்மின்தறிநிலையம் 75ஊழி ஊழியர்களுக்குவேலைவாய்ப் பளிக்கக்கூடியதாக இருக்கி றது. மக்கள் இயக்கமாகிய கூட்டுறவு இயக்கத்தினுல் உருவாக்கப்பட்ட இம்மின் தறி நிலையம் மக்களால் ஆதரவளித்து வளர்க்கப்பட வேண்டும். இது வளர்ந்து நாட்டில் அழகு பரப்புமா யின் வடபகுதி மக்களின்; கூட்டுறவாளரின் உழைப் பின் அழகையே பிறர் போற் றுவார்கள். எனவே இந்நிலை யத்தில் தயாரிக்கப்படும் துணிகளை கூட்டுறவு நலன் கருதி கூட்டுறவு உணர்வுடன் அனைவரும்வாங்கவேண்டும்.

வலிமேற்கு மின்தறி நிலை யத்தில் தயாரிக்கப்படும் ரே யோன் போன்ற துணிவகை கள் போல இலங்கையின் வேறு பகுதிகளில் செயற்கை நூல்களினுல் துணிகள் நெய் யப்படுகின்றன. இவைகளை தனிப்பட்ட முதலாளிகள் பலர் செய்கின்றனர். இவர் க்ளில் பெரும்பாலோர் அனுபவம்வாய்ந்த பிரசித்தி பெற்ற புடவை வியாபாரிக ளாக விளங்குவதனுல் அத் துணிகளை அவர்கள் விற்பனை செய்வதில்அதிகசிரமப்படத் தேவையில்லை. எனவே, இச் சமாசம் போன்ற கூட்டுற வுத்தாபனங்கள்தயாரிக்கும் துணிகளை விற்பனை செய்வ தற்கு—அவர்களின் முயற் சிக்கு ஆக்கமளிக்க வழிவகுப் பதற்கு அரசாங்க அனுசர ணையுடன் இயங்கும் கூ.மொ. வி. சலுசலா போன்ற வர்த் தக தாபனங்கள் கொள்வ னவு செய்யவேண்டும்.

மேலும் இலங்கையின் தேவைக்கு ரெயோன்செயற் கை நூல்இன்று பற்றுக்குறை யாக இருந்து வருகிறது என்ற குறையினையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகி றேன். இங்கு இயங்கும் பெரும்பாலான தொழிற் தாபனங்கள் பிறநாடுகளி லிருந்தே மூலப்பொருள்களை இறக்குமதி செய்து வருகின் றன. இதில் சில காலங்களில் பல இடையூறுகள் நேருவ தால் அத்தொழிற் தாபனங் கள் பாதிக்கப்படுகின்றன. எனவே நமது நாட்டில் கைத் தொழிலுக்கான மூலப் பொ ருள்களைத் தயாரிக்க அர சாங்கம் ஆதரவு கொடுக்க வேண்டும். கைத்தொழில் துறையில் கூட்டுறவு நிறுவ னங்களும் உற்சாகத்துடன் உழைத்து வெற்றிகாண விழையவேண்டும். மக்களும் கூட்டுறவின் வளர்ச்சி தமது வளர்ச்சிஎன்பதைஉணர்ந்து அவற்றை ஆதரிக்க வேண் டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. நா. சங்கங்கள் கூட்டுறவின் முதுகெலும்பு

கூட்டுறவு இயக்கத்தின் முதுகெலும்பாக விளங்கிய ஐக்கியநாணயசங்கங்கள் ப. நோ. கூ. சங்கங்கள் தோன்றியபின் கவனிப்பாரற்ற நிலையில் குற்றுயிரில் இருக்கின்றன. இச்சங்கங்களை வளர்க்க அரசாங்கம் உதவியளிக்க வேண்டும் என்பது பற்றி கூட்டுறவு ஆணை ஆய்வுக் குழுவும்எதுவும் குறிப்பிடவில்லை. எனவே, அங்கத்தவர்கள் வெளி உதவிகளை எதிர்பாராது இச்சங்கங்களை வளர்த்து பொருளாதார மேம்பாட்டிற்கு உழைத்தல் வேண்டும். இவ்வாறு தொல்புரம் மூளாய் ஐக்கிய நாணய சங்கச் சமாசம் நடாத்திய கருத்தரங்கில் மேற்படி சமாசத் தலைவர் திரு. மு. கணபதிப்பிள்ளை பேசுகையில் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் இச்சமாசத்தில் இணைக்கப்பட்டுள்ள அங்கத்துவ சங்கங்கள் திருப்தியான நிதி நிலையில் இருக்கின்றன. வங்கிக்குச் செலுத்த வேண்டிய பணத்தை எல்லாச் சங்கங்களும் தவணை தப்பாது செலுத்தியுள்ளன. அரசாங்கம் உதவியளித்தாலும் அளிக்காவிட்டாலும் கூட்டுறவாளருக்கு வ. ஐ.மே. சபை உதவியளிக்கும் என்று குறிப்பிட்டார்.

கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. V. கனகசபை பேசுகையில் ஐ. நா. சங்கங்கள் இப்பகுதி மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு நல்ல தொண்டு புரிந்துள்ளது. இச்சங்கங்கள் பலமான அத்திவாரத்தில் கட்டியெழுப்பப்பட்டதே இதற்குக் காரணம் என்று குறிப்பிட்டார். எனவே இச்சமாசத்தினதும் அங்கத்துவ சங்கங்களினதும், சேவைகளை விரிவுபடுத்தி திறமையாக ஆற்றுவதற்குப் போதிய அறிவினைப் புகட்ட வேண்டும் என மேலும் பேசுகையில் வலியுறுத்தினார்.

திரு. பூ. குமாரசாமி (கூ. உ. ஆ. ஆணையாளர்) பேசுகையில் பல அங்கத்தவர்கள் சங்கங்களை நடாத்துவதற்குரிய உண்மையான அறிவு வளர்ச்சியற்றவர்களாக இருக்கிறார்கள். எனவே சங்கமட்டத்தில் அவர்களுக்குக் கல்வியூட்ட முயற்சிக்க வேண்டும் என்றார். இக்கருத்தரங்கில் பழம்பெரும் கூட்டுறவாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுகமாயிருப்பது தனக்குப் பெரும் மகிழ்ச்சியையூட்டுவதாக மேலும் பேசுகையில் அவர் குறிப்பிட்டார்.

வ. ஐ. மே. சபை உப தலைவர் திரு. R. C. S. குக் பேசுகையில் இப்பகுதியில் முதன் முதலாக நிறுவப் பட்ட இச்சங்கத்தில் பழம் பெரும் கூட்டுறவாளர் சமுகமாயிருப்பது மகிழ்ச்சியும், உற்சாகமும் ஊட்டுவதாக இருக்கிறது என்று குறிப்பிட்டார். தொல்புரம் மூளாய் பரஸ்பர சேம இலாப நிதிச் சங்கம் ஆகியவைகளின் வளர்ச்சிக்கு முகாந்திரம் தம்பு, திரு. செல்லப்பா ஆகிய கூட்டுறவுப் பெரியார்கள் ஆற்றிய தொண்டு என்றும் போற்றுதற்குரியது என்று தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்ட அவர், யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி, வ. ஐ. மே. சபை, தொல்புரம் மூளாய் ஐ. நா. சங்கச்சமாசம் ஆகியன நிறுவப்பட்ட வரலாற்றை விளக்கினார். கடந்த காலங்களில் ஐ. நா. சங்கங்கள் கூட்டங்களை ஒழுங்காக நடாத்தியதுடன் அங்கத்தவர்களுக்கு கூட்டுறவுக் கல்வியினையும் சிறப்பாகப் புகட்டிவந்தன என்றுஅவர் சுட்டிக்காட்டினார். இச்சமாசம் தோன்றிய வரலாறு, வளர்ச்சி அங்கத்தவர்களின் சேவைநலம் பற்றி விளக்குமுகமாக ஒரு விசேட மலரை வெளியிட வேண்டும் என்று அவர் கருத்துத் தெரிவித்தார்

கூட்டுறவுக் காரியாலயப் பரிசோதகர் திரு. தி. முருகேசு பேசுகையில். கூட்டுறவுச் சங்கம் அங்கத்தவர்களின் தனிச் சொத்து. சங்கத்தைக் கொண்டு நடாத்தும்முழுப் பொறுப்பும்அவர்களுடையது. அங்கத்தவரல்லாதவரோ,அரசாங்கஉத்தியோகத்தரோஅதில்தலையிட உரிமையில்லை என்றார். மேலும்அவர்பேசியதாவது:பதியப்பட்ட ஒரு சங்கம் கூட்டுறவுக் கோட்பாடுகள் உபவிதிகளுக்கமைய நல்லமுறையில் இயங்கிவருகிறதா என்பதைக் கவனித்து வருவது தான் கூட்டுறவு உத்தியோகத்தரின் கடமை. சங்கத்தின் நடைமுறையிலோ நிருவாகத்திலோ அவர்கள் தலையிட முடியாது. ஆனால் ப. நோ. கூ. சங்கங்கள் அரசாங்கம் ஆற்ற வேண்டிய சில முக்கிய கடமைகளைக் கையேற்று நடாத்தி வருவதால் அக்கடமைகள் சீராக நடைபெற்று வருகின்றனவா என்பதைக் கவனிக்க அவர்களுக்கு அதிகாரமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கியை மேலும் பலமுடையதாக்க கூட்டுறவுச் சங்கங்களும், பணவசதியுடைய கூட்டுறவாளர்களும் ஊக்கமுடன் உழைக்க வேண்டும்.

# தென்கிழக்காசிய நாடுகளிலும் பார்க்க யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு வளர்ந்திருக்கிறது

## சர்வதேச கூட்டுறவு இணைப்புத்தாபனத்தின் பிரதேச அதிகாரி கருத்து

கூட்டுறவு இயக்கம் ஏனைய தென்கிழக்காசிய நாடுகளை விட யாழ்ப்பாணத்தில் உந்நத நிலையை அடைந்திருக்கிறது. இலங்கைக் கூட்டுறவு ஆணையாளராக இருந்த அனுபவத்தின் மூலமும், தென்கிழக்காசிய நாடுகளிலுள்ள கூட்டுறவு இயக்கங்களைப்பற்றி பெற்ற அனுபவத்தைக்கொண்டும் நான் கூறும் கருத்து இதுதான்.

இவ்வாறு முன்னாள் இலங்கைக் கூட்டுறவு ஆக்க ஆணையாளரும், இன்று சர்வதேச கூட்டுறவு இணைப்புத் தாபனத்தின் பிரதேச அதிகாரியாகக் கடமை புரிந்துவருபவருமான திரு. பி. ஈ. வீரமன் தெல்லிப்பளை கூட்டுறவு மருத்துவமனையில் "வீரமன் வார்ட்" திறப்புவிழா வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு இயக்கம் உந்நதநிலையில் இருப்பதற்குக் காரணம் இங்குள்ள மக்கள் நன்றி மறவாத பண்பும், கடமையுணர்ச்சி மிக்கவர்களாகவும் வாழ்வதுதான் என திரு. வீரமன் மேலும் பேசுகையில் சுட்டிக் காட்டினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், கூட்டுறவு இயக்கத்தின் முக்கிய கொள்கைகளில் ஒன்று சுரண்டலை அகற்றல். இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக இச்சங்கம் விளங்குகிறது. தனது கூட்டுறவு மருத்துவமனை என்ற முறையில் இங்கு வரும் நோயாளிகளுக்கு நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்களால் நல்ல சிகிச்சை அளிக்கப்படுகிறது. நோயாளிகள் கஷ்டமின்றி சிகிச்சை பெற நல்ல ஒழுங்குகள் அமைக்கப்பட்டிருக்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றன என மேலும் பேசுகையில் அவர் கூறினர்.

யாழ்ப்பாணப் பகுதியை விட இலங்கையில் ஏனைய பகுதிகளிலும் வேறு நாடுகளிலும் கூட்டுறவு இயக்கத்தில் அரசியல் வாதிகளின் தலையீடு இருக்கின்றது. இத்தகைய நிலை கூட்டுறவு இயக்கத்திற்கு பெரும் இழுக்கைத் தேடிக் கொடுக்கின்றது என்று தொடர்ந்து பேசுகையில்குறிப்பிட்ட திரு.வீரமன், கூட்டுறவு மக்கள் இயக்கம், அதன் கொள்கைகளைக் கடைப்பிடித்து சாதிக்க இயலாதது ஒன்றும் இல்லை என்று வலியுறுத்தினர்.

மேற்படி மருத்துவமனையில் ரூ. 40,000/- செலவில் கட்டப்பட்ட 'வீரமன் வார்ட்டை' காங்கேசன்துறை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் திறந்துவைத்து பேசுகையில், இம்மருத்துவமனை மக்களுக்கு சிறந்த சேவை புரிந்து துரிதமாக வளர்ந்துவருகின்றது என்று குறிப்பிட்டார்.

மூதவை உறுப்பினர் திரு. எஸ். நடராசா பேசுகையில் திரு. வீரமனைப் போன்ற அறிவிற்சிறந்தோரும், பெருமித உள்ளம் படைத்தோரும் இருப்பின் எல்லோரும் ஒற்றுமையாக வாழ வழிபிறக்கும் என்றார். கூட்டுறவு இயக்கத்தில் அரசியல்வாதிகள் தலையீடு இருப்பதால்தான் சங்கங்களின் வேலைகள் பாதிக்கப்படுகின்றனவென்றும், யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் அத்தகைய தலையீடு இல்லாதமை மகிழ்ச்சிக்குரியது என்றும் மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டார்.

# மின்விசை நெசவு மூலம் அதிக இலாபம்பெற முயற்சிக்கவேண்டும்

கவர்ச்சிமிக்க புதுரகத் துணிகளை உற்பத்தி செய்வதோடு அவற்றை அதிக விலைக்கு விற்காது சிறிது இலாபத்தை அடிப்படையாகக்கொண்ட விற்பனை ஒழுங்குகளைச் செய்யவேண்டும். இவற்றின்மூலமும் இச்சமாசம் மின்விசை நெசவில் மேலும் நல்ல வெற்றியை அடையமுடியும். இவ்வாறு வ. ஐ. மே. சபை தனிகாரி திரு. மு. கணபதிப்பிள்ளை வலிமேற்கு ப. நோ. கூ. ச. சமாசத்தின் 24-ம் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் பேசுகையில் உப்பளத்தை இலாபத்துடன் நடாத்துவதற்கு நிருவாக சபை தீவிர முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட அவர், காலை 10 மணிக்குத் தொடங்கிய இக் கூட்டம் தொடர்ந்து மாலை 6 மணிவரையும் நடைபெற்றுள்ளது என்றும் அங்கத்தவர் அனைவரும் அவ்வளவு நேரமும் இருந்து பலவிடயங்களை ஆராய்ந்தமை அவர்களின் கூட்டுறவு உணர்வைக் காட்டுகின்றது என்றும் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு திரு. வை. இராசசுந்தரம் தலைமை வகித்தார்.

பொதுச்சபையின் கடமைகளைப் பொதுச்சபை செய்ய வேண்டும்என்றும், நிருவாக சபையின் கடமைகளை நிருவாகசபை செய்யவேண்டும் என்றும், கூட்டுறவுக் காரியாலயப் பரிசோதகர் திரு. தி. முருகேசு பேசுகையில் குறிப்பிட்டார்.

இச்சமாசத்தில் 40 சங்கங்கள் கட்டிய பங்குத்தொகை ரூ. 42741/36. குலைக்கப்பட்ட சங்கங்களின் பங்குப் பணத்துடன் ரூ. 45891/27 பங்குப் பணக்கணக்கில் இருக்கிறது. அடக்கப் பணமாக ரூ.170,543/56ம் வேறு அடக்கப்பணமாக ரூ. 112 630/29ம் 2-4-68-ல் மிகுதி இலாபப் பணமாக ரூ. 147,148/21-ஐயும் திட்டக்கடுதாசி காட்டுகிறது. இச்சமாசத்தில்73,430 அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்கள் இருக்கின்றன.

வியாபாரத்தில் ரூ. 319, 940/27ஐ மொத்த இலாபமாகவும், ரூ. 164,359/17-ஐ சுத்த இலாபமாகவும் பெற்றுள்ளது. இக்கால எல்லைக்குள் உப்பளக் கணக்கில் ரூ. 73,948/53 சதத்தைசுத்த நட்டமாகப் பெற்றுள்ளது. உப்பளத்திட்டத்தில் ஆரம்பச் செலவின் மதிப்பிழிவாக ரூ. 35960/04ம், முதலீட்டின் கழிவாக ரூ. 24,255/04 ம், வங்கி வட்டியாக ரூ. 20,381/36ம் செலவானது கவனிக்கத்தக்கது. ஆகவே பொது இலாப நட்டக் கணக்கில் சுத்த இலாபமாக ரூ. 63,797/45ஐ பெற்றுள்ளது.

திருவாளர்கள் நா. மகேசன், வி.வி.மூர்த்தி, சி. மார்க்கண்டு, N. இரத்தினசிங்கம், இ. கந்தமுத்து, சு. சிவகுரு, செ. தில்லையம்பலம் ஆகியோர் நிருவாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காமாட்சியம்பாள் கூட்டுறவுக் கைத்தொழிற் சங்கம்

# உழைப்பின் சிகரம்

தொழிலாளர்களின் கை வண்ணத்தால் பசுமை அழகு குலுங்கும் தோட்டப்பாதையால் போய்க்கொண்டிருந்த என்னை மங்கல நாதமாக 'டணார்' 'டணார்' என்ற ஒலிகள் வரவேற்றன.

கைத்தொழிற் துறையில் பலகாலங்களாகத் தனியிடம் பெற்று மிளிரும் நீர்வேலி காமாட்சியம்மாள் கூட்டுறவுக்கைத்தொழிற்சாலையைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலுடன் நீண்ட பிரயாணம் செய்த என்னை, இரும்புகளில் விழும் கனமான அடிகளின் ஒலிப்பிரவாகங்கள் இதுதான் காமாட்சியம்மாள் கூட்டுறவுக் கைத்தொழிற்சாலை என்று குறிப்பிடுவது போலவும், இத்தொழிற்சாலையின் பரந்த புகழொலிகள் இங்கிருந்துதான் ஜனித்தெழுந்து எங்கும் பரவுகின்றன என்று விளக்குவது போலவும் இருந்தன. அழகான இயற்கைச் சூழலில் அத்தொழிற்சாலை அமைந்திருக்கிறது. இயற்கைத் தாயைச் சிரிக்கவைத்து மக்களுக்கு அவளை உணவூட்டும்படி செய்யும் கைவண்ணம் மிக்க விவசாயிகள் வாழும் அவ்வூரில், இரும்பிலும், மரத்திலும் செய்யும் தொழிலே தெய்வம் என தொழில் புரிந்து வாழ்வில் செம்மைகாண உழைக்கும் உத்தமத் தொழிலாளரின் அத்தொழிற்சாலையில் ஆலயத்தில் நுழைவது போல நுழைகின்றேன்.

நீண்டவிசாலமான மண்டபத்தில் இரும்புத் தொழிலாளர் பகுதிபகுதியாக இருந்து சுறுசுறுப்புடன் தமது தொழிலைச் செய்துகொண்டிருக்கின்றனர். வரிசை வரிசையாகப் பட்டடைகள், துருத்திகள், நெருப்புச் சுவாலைகள், பழுக்கக் காய்ந்துகொண்டிருக்கும் இரும்புகள்— இத்தனைக்கும் மத்தியில் கரங்களின் தசைகள் விம்ம, வியர்வை துளித்தோட இரும்பை அடித்து வண்ணக்கலைவடிக்கும் தொழிலாளர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாளின் அழகான பெயரைத் தாங்கிநிற்கும் அத்தொழிற்சாலையில் உண்மையில் அம்பாள் நடமாடுகின்ருள்; அவளின் காற்சிலம்புகளிலிருந்து பிறக்கும் ஒலிகள்தான் இங்கு கேட்கின்றன என்றுஎண்ணும்படியாக இரும்புத் தொழிற் பகுதியிலிருந்தும், மரத் தொழிற் பகுதியிலிருந்தும் ஒலிகள் கலந்தொலித்தன. இரும்புத் தொழிற் பகுதியைக் கடந்து மரத் தொழிற் பகுதிக்குச் செல்கிறேன்.


மரமறுக்கும் பிரமாண்டமான மின் இயந்திரம் வரவேற்கின்றது. அப்பொழுது



செந்தீயின் முன்னே தொழிற் செம்மை திகழ்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இயந்திரம் இயங்க வில்லை. இராட்சத மரங்களை வாழைப்பழத்தில் ஊசி ஏறுவதுபோல் அரியும் அதன் வாளில் கைவைத்துத் தடவுகிறேன். இராட்சதன் கொடூரமாகச் சிரித்தால் பற்கள் எப்படித்தெரியுமோ அதுபோல அவ்வாளின் பற்கள் பயமுறுத்தின. சட்டென்று கையை எடுத்து முகத்தையும் மறுபுறம் திருப்புகிறேன். தொழிலாளியின் கைமெருகேறிய பலவிதமான மரப் பொருள்கள் என்னைப் பார்த்து கலீரென்று அழகுச் சிரிப்புச் சிரிக்கின்றன! அங்குள்ள தொழிலாளர் எதை



**உழைக்கும் கரங்களில் உருவாகும் கலைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுமே நோக்காது கடமையே கண்ணுகப் பரபரவென்று தமது வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர். அவர்களது சுறுசுறுப்பான கரங்களிலிருந்து அழகுக் கலைகள் பிறந்து கொண்டிருக்கின்றன.

மரங்களைச் சீவுவதற்கும் கடைவதற்கும் இயந்திரம் பொருத்தப்பட்டிருக்கின்றன. அதேபோல இரும்பைத் துளைத்தல், புரி அறுத்தல் போன்றவற்றிற்கும் இயந்திரம் இணைக்கப்பட்டுள்ளது.

"பராசக்தி உறையுமிடங்கள்பலவற்றுள் தொழிலாளியின் கரமும் ஒன்று"என ஒரு கவிஞர் குறிப்பிட்டதை காமாட்சியம்பாள் கைத்தொழிற் கூட்டுறவுச் சங்கத் தொழிலாளர் மூலம் நேரடியாகக்கண்டு நன்கு உணர்ந்து கொண்டேன். அத்தொழிற் சாலையில் சிறுவர், இளைஞர், நடுத்தரவயதினர், முதிர்ந்த வயதினர் அனைவரும் உழைப்பினைத் தெய்வமெனப் பூஜித்து வியர்வை சிந்தி உழைப்பதை இன்பமாக அனுபவித்து வருகின்றனர். அதுமாத்திரமல்ல, அவர்கள் தமது தொழிலை கூட்டுறவு என்ற ஒப்புயர்வற்ற வழி மூலம் வளர்த்து வருவதால் அவர்களிடை பரஸ்பர கூட்டுறவு நல்லெண்ணங்களையும், அவற்றின் காரணமாக ஒப்புயர்வற்ற எழுச்சியினையும் காணமுடிகின்றது. இவர்களது வெற்றி என்ற கலையொளி வீசும் கட்டிடம் கூட்டுறவு என்ற பலமான அத்திவாரத்தில் எழுப்பப்பட்டதாகும்.

காமாட்சியம்பாள் கைத்தொழிற்சாலையில் செய்யப்பட்டபொருள்களுக்குதனிப்பட்ட ஒரு பெருமை; மதிப்பு எங்கும் இருந்து வருவதை எவரும் ஒப்புவர். எத்தனையோ நுட்பமான நவீன பொருள்கள்கலைமெருகுடன் அங்கு செய்யப்படுகின்றன. வெளி ஊர்களிலிருந்து வட பகுதிக்கு வருபவர்கள் இங்குள்ள சரித்திரப் பெருமை வாய்ந்த இடங்களையும், புனித ஸ்தலங்களையும் பார்க்கத்தவறுவதில்லை. அதேபோல காமாட்சியம்பாள் கைத்தொழிற்சாலைக்குச் சென்று அங்குள்ள பொருள்களை வாங்கிச் செல்வதில் தமது உல்லாசப் பயணத்தில் நிறைவைக் காணுகிருர்கள்.

நவீன விவசாயக் கருவிகளை இத்தொழிற்சாலை இப்போது வெற்றிகரமாகச் செய்து தனது புகழில் ஒரு பங்கை இன்னும் கூட்டியுள்ளது. இங்கு செய்யப்படும் உழவு இயந்திரத்தின் கொழுக்கள், தண்ணீர் இறைக்

கும் இயந்திரங்களுக்கான வண்டிகள் முதலியன வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாக்கப்படுவன வற்றிலும் பார்க்கத் தரமிக்கவையென்று எல்லோரும்பெரிதும்விரும்பி வாங்குகிருர்கள். இங்கு தயாரிக்கப்படும் மர, இரும்புப் பொருள்கள் கலையழகுடன் மிளிர்வதுமாத்திரமல்ல, நியாயமான விலைக்கும் விற்கப்படுகின்றன. இத்தொழிற்சாலையின் புகழ் இன்று நேற்று வந்ததல்ல. இது புகமுடனேயே தோன்றியது. 1952-ம் ஆண்டு நடைபெற்ற கொழும்புத்திட்டப் பொருட்காட்சியில் கைத்தொழிலுக்கான முதற்பரிசாகத் தங்கப் பதக்கத்தை இத்தொழிற்சாலை பெற்றுள்ளது.

பிரபலமாகவிளங்கும் எத்தனையோ பெரிய கட்டிடங்களுக்கு இத்தொழிற்சாலை இரும்பு, மர வேலைகளைச் செய்து இலங்கை முழுவதும் புகழ் பரப்பிக்கொண்டிருக்கிறது. பாடசாலைகளுக்கும் ஒப்பந்தமாகப் பல பொருள்களைச் செய்து வருகின்றது. இதன் புகழ் கடல்கடந்து மலேஷியா, இங்கிலாந்து முதலிய இடங்களையும் எட்டியுள்ளது.

1947-ம் ஆண்டு 12 அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இத்தொழிற்சாலை மர வேலை, இரும்புவேலை ஆகிய இரு வேலைப்பகுதிகளையும் கொண்டதாகும். இன்று இத்தொழிற்சாலையில் 32 பேர் அங்கத்துவம் வகிக்கிருர்கள். இத்தொழிற்சாலையில் அங்கத்துவம் வகிப்பது இலேசான காரியமல்ல. இரும்பு மர வேலைகளில் ஈடுபடும் உண்மையான தொழிலாளர்களே அங்கத்தவராகலாம். அதுவும் நீர்வேலியில் வாழ்பவர்களாக இருக்க வேண்டும். இக்கோட்பாடு என்னை மிகவும் கவர்ந்தது.

இத்தொழிற்சாலையில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு 15 நாட்களுக்கொருமுறை சம்பளம் வழங்கப்படுகிறது. திறமையாக வேலை செய்யும் தொழிலாளி சராசரி ரூபா 250/- பெறுகிருர். ஆகக்குறைந்தது ஒரு தொழிலாளி ரூ. 100/- பெறுகிருர். கடந்த வருடம் இச்சங்கம் ரூ. 32075/07 சுத்த இலாபமாகப் பெற்றுள்ளது.

இங்கிலாந்து, பெல்ஜியம் ஆகிய இடங்களிலிருந்து இரும்புத் தொழிலுக்கு வேண்டிய இரும்புகளை நேரடியாக இச்சங்கம் இறக்குமதி செய்து வந்தது. அந்நிய செலாவணி சான்றிதழ் பத்திரம் காரணமாக இப்பொழுது இரும்புக் கூட்டுத்தாபனத்திடம் இரும்பைப்பெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றது. கோடரி, மண் வெட்டி ஆகியவற்றை அரசாங்க நிறுவனம்மாத்திரமே செய்து வருவதை நாம் அறிவோம். ஆனால், சிறந்து விளங்கும் கூட்டுறவுத் தொழில் நிறுவனமாகிய காமாட்சியம்பாள் கைத்தொழிற் சங்கத்திற்கு கோடரி, மண்வெட்டி செய்யும் உரிமையை அரசாங்கம் இப்போது வழங்கியுள்ளமை பெருமைக்குரியது.

இச்சங்கத்தின் வெற்றிக்குக் காரணம் கூட்டுறவு வழியில் இது ஒழுகுவதுதான் என்பதை அறிந்துகொண்ட நான், இன்னொரு இரகசியத்தையும் உணர்ந்தேன். அதாவது அங்குள்ள ஒவ்வொரு தொழிலாளி தொடக்கம் அங்கு பணிபுரியும் ஊழியர் வரை அனைவரும் இரும்பு, மரத்தொழில்களின் நுட்பங்களைப்பற்றிய விரிவான அறிவையும், செயற்றிறனையும் பெற்றிருக்கிறார்கள். ஒரு தாபனம் வளர்ச்சிப் பொலிவுடன் விளங்குவதற்கு அங்குள்ள ஒவ்வொருவரும் அங்கு நடைபெறும் விடயங்களில் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கவேண்டும் என்ற உண்மையினை இத்தாபனத்தில் கண்டு மகிழ்ந்தேன்.

இச்சங்கத்தின் தலைவராக திரு. க. இராசரத்தினமும், காரியதரிசியாக திரு.சு.தர்மலிங்கமும் சேவையாற்றுகின்றனர். முகாமையாளராக திரு. க. வல்லிபுரம் பணிபுரிகிறார். நிதிசம்பந்தமான கணக்குகள் இவர் பொறுப்பிலேயே இருக்கின்றன. திரு. ச. துரைச்சாமி போர்மனாகக் கடமை ஆற்றுகின்றார். ஒரு லிகிதரும் விற்பனையாளரும் மாதாந்த சம்பள அடிப்படையில் இங்கு பணிபுரிகிறார்கள்.

நிருவாகசபையில் இரும்புத்தொழிற்பகுதியைச் சேர்ந்தவர்கள் 4 பேரும், மரவேலைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் 2 பேரும் கூட்டுறவுப் பரிசோதகர் ஒருவரும், குடிசைக் கைத்தொழிற் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவரும் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

ஆரம்பத்தில் குத்தகைக்கு வேறு ஒரு காணியில் தொழிற்சாலையினை அமைத்த இச்சங்கம், இன்று சொந்தக் காணியில் தொழிற்சாலையினை நிர்மாணித்துள்ளது. கட்டிடமும் காணியும் 50 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்தனவாக மதிக்கப்படுகின்றன. மரம், இரும்பு ஆகிய இருப்புப் பொருள்கள் 80 ஆயிரம்ரூபாவிற்கும், இயந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரங்கள் 25 ஆயிரம் ரூபாவிற்கும் மதிக்கப்பட்டுள்ளன.

இச்சங்கத்தில் ஒரு அங்கத்தவரின் பங்குத் தொகை ரூ. 500/- ஆகும். அங்கத்தவர் விலகும்போது எடுத்துக் கொள்ளக்கூடியதாக பங்கு மாற்றுநிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மிகுதி இலாபத்தில் கட்டிடநிதி, பொதுநலநிதி, பங்குமாற்றுநிதி ஒதுக்கி மிகுதியில் ஒருவீதம் அல்லது அரைவீதம் அங்கத்தவர் ஈட்டும் வேதனத்திற்குத் தக்கவாறு இலாபம் பங்கிடப்படுகின்றது.

இச்சங்கத்திலே செய்யப்படும் பொருள்கள் விற்பனை செய்வதற்காக அழகான முறையில் ஒரு விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அந்நிலையத்தில் பொருள்கள் யாவும் சிறப்பான முறையில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இச்சங்கத்தின் தொழிற்பாட்டையும், கூட்டுறவு உணர்வில் ஊறிய அங்கத்தவர்களின் முயற்சியினையும் கண்டு களித்து மெய்மறந்து நிற்கையில்,

"குடைகள் செய்வோம்
உழுபடைகள் செய்வோம்
கோணிகள் செய்வோம்
இரும்பாணிகள் செய்
வோம்"

என்ற பாரதியின் பாட்டு எனது இதயகீதமாக எழுந்தது.

# சங்கம் திறம்பட இயங்கக் காரணம்

காரைநகர் கணேசன் ஐக்கிய பண்டசாலைச் சங்கத்தின் இருபத்தாறுவது வருடாந்தப் பொதுக் கூட்டம் திரு. வே. சுப்பிரமணியம், J. P. அவர்களின் தலைமையில் அணிமையில் நடைபெற்றது.

இச்சங்கம் இயங்குவதில் தளர்ச்சியடைந்தபோது திறமையானவர்கள் பொறுப்பேற்றதால் திறம்பட இன்று இயங்கிவருகின்றது என்றும், சங்கத்தை வளர்க்க அங்கத்தவர் எவ்விதமாக உதவ வேண்டும் என்றும், நிருவாக சபையினரும் பணியாளர்களும் எவ்வண்ணம் கடமையாற்றவேண்டும் என்றும் வ. ஐ. மே. சபை தனாதிகாரி திரு. மு. கணபதிப்பிள்ளை, திரு S. S. குமாரசாமி ஆகியோர் கருத்துத் தெரிவித்தனர். உத்தியோகத்தர் தெரிவு விபரம் வருமாறு: தலைவர்: திரு. வே. சுப்பிரமணியம், J.P. உபதலைவர்: திரு. ச. கதிரவேலு, காரியதரிசி: திரு. அ. சுப்பிரமணியம், தனாதிகாரி: திரு. சி. க. அருணாசலம், நிருவாகசபை உறுப்பினர்: திருவாளர்கள்: ச. தில்லையம்பலம், சு. முருகேசு, சி. அருளப்பாபிள்ளை, ச. பொ. நடராசா, க. நல்லையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

# யாழ்ப்பாண மாவட்டத்தின் விவசாயப் பிரச்சினைகள்

ஒரு காலத்திலே இலங்கை இங்கு உற்பத்தி செய்யக்கூடிய உபஉணவுப் பயிர்களைப் பெருமளவிலே இறக்குமதி செய்தது. எடுத்துக்காட்டாக 1964-ம் ஆண்டிலே இறக்குமதிசெய்யப்பட்ட முக்கிய உபஉணவுப் பொருள்களின் புள்ளி விபரங்களைக் கவனிப்போம்:-

| | அந்தர் | | |
|---|---|---|---|
| செத்தல் மிளகாய் | 425383 | ரூ. | 46,470,854/- |
| சின்ன வெங்காயம் | 140579 | ,, | 2,822,228/- |
| பம்பாய் வெங்காயம் | 1,244311 | ,, | 22,983,868/- |
| உருளைக்கிழங்கு | 1,471458 | ,, | 25,467,780/- |
| பாசிப்பயறு | 200936 | ,, | 6,780,796/- |
| சோளம் | 700731 | ,, | 1,495,634/- |

**J. M. சபாரத்தினம்**
மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.

தீவிரமான பயிர்ச்செய்கை மூலம் நாட்டை இவ் உப உணவுப் பயிர்களிலே தன்னிறவைப் படிப்படியாக எய்தச் செய்வதே விவசாயத் திட்டத்தின் நோக்கமாகும். இவ்விடயத்திலே யாழ்ப்பாண மாவட்டம் முக்கிய பங்கினை வகிக்கமுடியும். யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களைத்தவிர ஏனைய மாவட்டங்களில் மிளகாய்ப் பயிர்ச்செய்கை வான் மழையிலேயே தங்கியிருக்கிறது. சேனைகளிலும் வீட்டுதோட்டங்களிலும் இப்பயிர் பயிரிடப்படுகின்றது. விசேட திட்டப்பகுதிகளிலே சிறு போகத்தில் பல்வகைப் பயிர்கள் பயிரிடப்படுவதால் மிளகாய்ச் செய்கையைத் திட்ட அடிப்படையிலே அமைக்க முடியும். இளைஞர் குடியேற்றத்திட்டங்களில் இப்பொழுது மிளகாய் பயிரிடப்படுகின்றது. அத்துடன் நீர்ப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனவசதி உள்ள இடங்களில் மேட்டு நிலங்களிலே சிறு போகத்தில் மிளகாய் பயிரிடப்படுகின்றது. கடந்த நான்கு ஆண்டுகளிலே யாழ்ப்பாண மாவட்டத்தில் மிளகாய்ப் பயிர்ச் செய்கையின் புள்ளிவிபரங்கள் வருமாறு:

| ஆண்டு | உற்பத்தி (அந்தர்) | ஏக்கர் |
|---|---|---|
| 1966—1967 | 3192 | 1891 |
| 1967—1968 | 20600 | 3432 |
| 1968—1969 | 23331 | 3333 |
| 1969—1970 (இலக்கு) | 20560 | 3505 |

யாழ்ப்பாணம் சின்ன வெங்காயத்திற்குப் பெயர் போனது. இலங்கையின் 10 மாத தேவைகளை அது பூர்த்தி செய்கிறது. சின்ன வெங்காயத்தின் உத்தரவாதவிலை மாதாந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. எல்லோரும் ஒரே காலத்தில் பயிரிடாதிருப்பதற்குத் தூண்டுவதற்கும் வெங்காயத்தினைப் பேணிவைத்து, வெங்காயத் தட்டுப்பாடு ஏற்படும்போது அரசாங்கத்திற்கு விற்பதற்கு ஊக்குவிக்கும் நோக்கத்துடனேயும் இத்திட்டம் வகுக்கப்பட்டது. விலைகளின் விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| ஜனவரி | 1அந்: | ரூ. 34-72 |
| பெப்ரவரி | ,, | ,, 31-36 |
| மார்ச் | ,, | ,, 25-76 |
| ஏப்ரல் | ,, | ,, 28-00 |
| மே, ஜூன் | ,, | ,, 31-36 |
| ஜூலை | ,, | ,, 22-40 |
| ஓகஸ்ற் | ,, | ,, 25-76 |
| செப்டெம்பர் | ,, | ,, 29-12 |
| ஒக்டோபர் | ,, | ,, 32-36 |
| நவ, டிசம்பர் | ,, | ,, 34-72 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த நான்கு ஆண்டுகளாக இரு போகங்களிலும் வெங்காயப் பயிர்ச்செய்கை விரிவாக்கப்பட்டுள்ளது. விபரங்கள் வருமாறு;

| போகம் | | ஏக்கர் | உற்பத்தி | உத்தரவாத விலைத்திட்டக் கொள்வனவு |
|---|---|---|---|---|
| பெ. போகம் | 1966-67 | 2839 | 24100 (அந்) | 202584 |
| ,, | 1967-68 | 3604 | 252280 ,, | 184005 |
| ,, | 1968-69 | 3594½ | 323505 ,, | 223584 |
| சி. போகம் | 1967 | 3019 | 229440 ,, | 197009 |
| ,, | 1968 | 3371 | 310000 ,, | 211418 |
| ,, | 1969 | 3519 | 281520 ,, | 227439 |

முன்பு மலைநாட்டில் குறிப்பாக நுவரேலியா மாவட்டத்திலும், பதுளை மாவட்டத்திலும்தான் உருளைக்கிழங்கு பயிரிடப் பட்டது. 1964/65 ல் யாழ்ப்பாண மாவட்டத்தில் முதன் முறையாக பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு 15 ஏக்கரில் உருளைக்கிழங்கு பயிரிடப் பட்டது. 1965/66 ல் 70 ஏக்கரில் உருளைக்கிழங்கு பயிரிடப்பட்டு உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் ஏறக்குறைய 3500அந்தர் கொள்வனவு செய்யப்பட்டது. 1966/67 ல் 129 ஏக்கரில் உருளைக்கிழங்கு பயிரிடப் பட்டு 7980 அந்தர் கொள்வனவு செய்யப்பட்டது. உருளைக்கிழங்கு இறக்குமதி தடைசெய்யப்பட்டதும் விலைக்கட்டுப்பாடு நீக்கப் பட்டதும் உருளைக்கிழங்குப் பயிர் செய்கைக்கு பெரும் தூண்டுதலாய் அமைந்தன. உருளைக்கிழங்கின் சில்லறை விலை இரு 1-20 ஆக உயர்ந்தது. வழக்கமாக புகையிலை பயிரிடப்பட்ட நிலங்களிலே உருளைக்கிழங்கைப் பயிரிட கமக்காரர் முனைந்தனர். புள்ளி விபரங்கள் வருமாறு:

| ஆண்டு | ஏக்கர் | உற்பத்தி (அந்தர்) |
|---|---|---|
| 1967—68 | 489 | 46944 |
| 1968—69 | 1296½ | 155520 |
| 1969—70(இலக்கு) | 1300 | 156000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலக்கடலையும் பாசிப் பயறும்

குடாநாட்டிலும் ஏனைய பகுதிகளிலும், நிலக்கடலை, பாசிப்பயறு ஆகியவற்றின் பயிர்ச் செய்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாகக் குடியேற்றத் திட்டங்களில் மேட்டு நிலங்களிலே இவற்றினைப்பயிரிடுவதற்குப் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகின்றது. ஆனாலும், 1968/69ல் பருவமழை உரிய காலத்தில் பெய்யாததினாலும் சிறுபோகப் பயிர்ச் செய்கை செய்ய முடியாததினாலும் இத்திட்டங்களைச் செயற்படுத்த முடியாது போயிற்று. 1969/70ல் இவற்றின் பயிர்ச்செய்கை இலக்கு வருமாறு:

| | | மொத்தம் | உற்பத்தி |
|---|---|---|---|
| **நிலக்கடலை** | | | |
| பெரும்போகம் | 435 ஏக்கர் | 1102 | 8894 அந், |
| சிறுபோகம் | 667 ,, | | |
| **பாசிப்பயறும் கடலையும்** | | | |
| பெரும்போகம் | 216 ஏக்கர் | | |
| சிறுபோகம் | 846 ,, | 1080 | 1444 ,, |

1969/70 ல் யாழ்ப்பாண மாவட்டத்தில் சோளன் கிழங்குவகைகளினது பயிர்ச் செய்கை வருமாறு:

| | | உற்பத்தி |
|---|---|---|
| **சோளம்** | 17 ஏக்கர் | 340 அந்தர் |
| **கிழங்குவகைகள்** | 635 ஏக்கர் | 4875 தொன் |

# இளைஞர் குடியேற்றத் திட்டங்களும் உப உணவுப் பயிர்ச் செய்கையும்

இப்பொழுது பயிரிடப்படும் தோட்ட நிலங்களிலும், இளைஞர் குடியேற்றத் திட்டங்களிலே வழங்கப்படும் புதிய காணிகளிலும் உப உணவுப் பயிர்ச் செய்கையை விரிவாக்குவதற்கு விவசாய அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

நெற்பயிர்ச் செய்கை மூலம் கிடைக்கக்கூடிய வருமானத்திலும் பார்க்க இரண்டுமடங்கு வருமானத்தை உபஉணவுப் பயிர்ச் செய்கை மூலம் பெறலாம். ஆனாலும் மிக அக்கறை எடுத்து இவற்றினைக் கமக்காரர்கள் கண்காணித்தல் வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு ஏக்கர்களில் உப உணவுகளைப் பயிரிட்டால் ஒவ்வொருஇளைஞனும் வருடம் ரூ. 3,000/- வருமானத்தைப் பெறலாம்,

இத்தகைய திட்டங்களைச் செயற்படுத்துவதன் மூலம் அந்நிய செலாவணியை மிச்சம் பிடிப்பதுடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலவி வரும்படித்த வாலிபர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஓரளவு தீர்க்கலாம்.

**விஸ்வமடுக் குளம்**

2990 ஏக்கர் அடி விஸ்தீரணத்தில் நீர் தேங்கியுள்ள இக் குளத்தின் நீர்ப்பாசன வசதிகளைப் பயன்படுத்தி நெற்செய்கையை மேற்கொள்வதென முதலில் தீர்மானிக்கப்பட்டது. ஆனல் குளம் புனருத்தாரணம் செய்யப்பட்ட பின்பு, அப்பகுதி மண் உப உணவுப் பயிர்ச்செய்கைக்கு உகந்ததாகக் காணப்பட்டதால் இத்திட்டத்தின்கீழ் உபஉணவுப் பயிர்ச் செய்கைக்கு மட்டுமே காணிகளை வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது. 1966ல் இளைஞர்கள் முதல் முறையாக இங்கு குடியேற்றப்பட்டனர். இப்பொழுது இத்திட்டத்திலே 159 இளைஞர்கள் குடியேறி இருக்கின்றனர். ஆனல், 1968ல் பெய்த அடைமழையின் காரணமாக சில நிலப் பகுதிகள் வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்டன. இதன் விளைவாக 14 இளைஞருக்கு வேறு நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் வெள்ளம் வடிந்தோடுவதற்கு வடிகால்களை அமைத்துக் கொடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இளைஞனுக்கும் 3 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. இதில் 2 ஏக்கர் பயிர்ச் செய்கைக்கும், 1 ஏக்கர் வீடு கட்டுவதற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.1968ம் ஆண்டிலும் 1969ம் ஆண்டிலும் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு முறையே 178, 243 ஏக்கராகும்.

1968ம் ஆண்டில் ஒவ்வொரு இளைஞனும் மொத்தமாக 3324 ரூபாவைவருமானமாகப் பெற்றனர் எனக் கணிக்கப்பட்டுள்ளது. 1969ம் ஆண்டில் ஒவ்வொரு இளைஞனது மொத்த வருமானம் ரூ. 4054 என கணக்கிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு இளைஞனும் 2 ஏக்கரில் பயிரிட்ட மிளகாய் மூலம் பெற்ற வருமானமே இவ்வாறு கணிக்கப்பட்டுள்ளது. வீட்டைச் சுற்றிவர இருக்கும் நிலத்திலே பயிரிடப்பட்ட வெங்காயம், நிலக்கடலை, வாழை போன்றவற்றின் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற வருமானம் இதில் சேர்க்கப்படவில்லை. 1968ம் வருடம்ஓர் இளைஞன் 15,000 ரூபாவை வருமானமாகப் பெற்றுள்ளான். இதுவே அவ்வாண்டின் மிகக் கூடிய வருமானமாகும். 1969ம் ஆண்டில் ஆகக் கூடுதலான வருமானம் 20 ஆயிரம் ரூபா யாகும்.

இத்திட்டத்திலே 350 இளைஞரைக் குடியேற்றுவ தற்கு உத்தேசிக்கப்பட்டுள் ளது. 1970ல் மேலும் 100 இளைஞரைக் குடியேற்றுவ தற்கு நடவடிக்கை எடுக்கப் படும். (வளரும்)

# இங்குள்ள மாதர் சங்கத்தின் பணிகள் மேல்நாட்டு மாதர்களைக் கவர்ந்தன

திருநெல்வேலி கூட்டுறவு கைப்பணிச் சங்கத்தை அணி மையில் சென்று பார்வை யிட்ட இங்கிலாந்திலுள்ள கூட்டுறவு மாதர்சங்கத்தைச் சேர்ந்த திருமதி T. ஹென்சி திருமதி T. யங் ஆகியோர் மேற்படி சங்கத்தில் செய் யப்பட்ட கைப்பணிப்பொ ருள்கள் உயர்தரமானவை யாகவிளங்குகின்றன என்று பாராட்டினார்கள்.

திருமதி யங் பேசுகை யில் தமது நாட்டில் அமைக் கப்பட்டிருக்கும் மொத்த வியாபாரத்தாபனங்களும் சில்லறை வியாபாரத்தாப னங்களும் மக்களுக்குத் தேவையான பொருள்களை விநியோகிக்கும் முறையை விளக்கினார்.

கல்வி வளர்ச்சிக்காக தமது நாட்டிலுள்ள மாதர் சங்கங்கள் எவ்வாறு உழை க்கின்றன என்பதை திரு மதி ஹென்சி எடுத்துரைத் தார். பொதுமக்களுக்கு வேண்டிய கல்வி கலாச்சார தேவைகளைப் பெறுவதற்கு அச்சங்கங்கள் தீர்மானங் களை நிறைவேற்றி அவற்றை அரசாங்க மூலம் நிறை வேற்றி பிரச்சினைகளைத் தீர்த்து வருகின்றன என மேலும் பேசுகையில் விளக் கினார்.

திருமதி ஹென்சி, திரு மதி யங் ஆகியோர் இங் குள்ள பல கூட்டுறவுச்சங் கங்களுக்கும் சென்று பார் வையிட்டு தமது நாட்டு மாதர்சங்கங்கள் வியாபார நிலையங்கள் மூலம் பொது மக்களுக்குத் தேவையான பொருள்களை விநியோகிக் கும் முறையினை விளக்கி யுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதியின் கைத்தொழில் அபிவிருத்தி

—A. M. ஆரிய அபேயசிங்கி

இலங்கையிலே பொருளாதார உற்பத்தியைவிட மக்கட்தொகை பெருகிக் கொண்டே செல்வதனுல் பொருளாதார அபிவிருத்தி இன்றியமையாததாயிருக்கின்றது. இத்துடன் கைத்தொழில், உத்தியோகம் வருமானம் சம்பாதித்தல் முதலியவற்றிற்கு மூலமுதலான வள ஆதாரம் இதுவரை போதியளவு பயன்படுத்தப் படவில்லை. இதனுல் எமது பொருளாதாரம் போதிய அபிவிருத்தி யடையவில்லை எனலாம். இவ்விடயத்திலே வடமாகாணம் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றது எனலாம். இவ்விடயத்திலே போதிய மூலவளங்களும், முதலும் ஆட்பலமும் தொழிற்துறை உரிமையாளரும் இருந்தும் வடமாகாணம் பின்தங்கிய நிலையிலிருப்பது வருந்தத்தக்கது. இலங்கையிலே ஏறக்குறைய 3ஆயிரம் கைத்தொழில்கள் இருக்கின்றன. அவற்றில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட 62 கைத்தொழில்களே இருக்கின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் 4 அரசாங்க கைத்தொழில் நிலையங்கள் இருக்கின்றன. அவை காங்கேசன் துறையிலும் ஆனையிறவிலும், சுன்னுகத்திலும் பரந்தனிலும் நிறுவப்பட்டிருக்கின்றன. மன்னுர் மாவட்டத்தில் 2 தனிப்பட்ட கைத்தொழில் நிலையங்கள் இருக்கின்றன. வவுனியா மாவட்டத்தில் ஒரு தனிப்பட்ட கைத்தொழில் நிலையமும், ஓர் அரசாங்க நிறுவனமும் இருக்கின்றன. திருக்கோணமலை மாவட்டத்தில் 6 தனியார்துறை தொழில் நிலையங்களும், ஓர் அரசாங்க கைத்தொழில் நிறுவனமும் இருக்கின்றன. இப்புள்ளி விபரங்களிலிருந்து வட இலங்கையில் தீவின் ஏனைய பாகங்களை

## சில சாத்தியக் கூறுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட குறைந்தளவு கைத்தொழில் நிலையங்களே இருக்கின்றன என்பது புலனாகும். இதற்குக் காரணம் இலங்கையின் பெரும்பாலான கைத்தொழில்கள் சந்தையைத் தழுவியவையாய்இருப்பதே. இவைவணிகத்தினதும் கைத்தொழிலினதும் மையமான கொழும்பு நகரத்திற்கு அண்மையில் நிறுவப்பபட்டிருக்கின்றன. இதனுல் வடஇலங்கையிலே கைத்தொழில்களை நிறுவமுடியாதென்ருே நிறுவக் கூடாதென்ருே கொள்தற்கில்லை. கைத்தொழில் வளர்ச்சிக்கு வசதிகள் வடபகுதியில் உள்ளன. திருப்திகரமான போக்குவரத்து வசதிகள் இருக்கின்றன. மேலும் விமானத் தொடர்புகளும் இருக்கின்றன. இத்துடன் தொலைபேசித் தொடர்புகளும் இருக்கின்றன. இவற்றைவிட மின்சார வினியோகமும் அமைக்கப்பட்டுள்ளது. அவற்றுடன் கல்வியும் சீரான நிலையில் இருக்கின்றது. நல்ல அரசாங்க தனியார்துறை பாடசாலைகள் இருப்பதோடு தொழிற்பயிற்சியை அளிப்பதற்கு கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றும் கொக்குவிலில் நிறுவப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு வங்கியின் மூலமும், இலங்கை வங்கிக்கிளை மூலமும் வேண்டிய கடன்களைப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் சீரான முறையிலே கூட்டுறவு இயக்கம் இப்பகுதியிலே அமைந்திருக்கின்றது. உடல் நலசேவைகள் நன்கு அமைந்திருப்பதுடன், போதிய ஆட்பலத்தையும் இப்பகுதியிலே பெற்றுக் கொள்ளலாம். இங்கு உற்பத்தியாகும் பொருள்களை விற்பனை செய்வதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இத்தகைய வசதிகள் இருந்தும் நுகர்வோருக்கு வேண்டிய பொருள்களை யாவது தயாரிக்கக்கூடியபல நோக்கு கைத்தொழிற் சங்கங்களை இதுவரை நிறுவ முயலாதது எனக்கு வியப்பளிக்கின்றது.

மூலவளங்களைத் தழுவிய தொழில்களை நிறுவக்கூடிய சாத்தியக்கூறுகள் வடஇலங்கையில் நிறைய உள்ளன. அத்துடன் வடமாகாண மக்களிடையே பொருள்களை வாங்கக்கூடிய சக்திகள் இருப்பதனுல் தேவையைத் தழுவிய தொழில்களை நிறுவுவது சாத்தியமாகும்.

### உலோகங்களைச் சார்ந்த கைத்தொழிற்சாத்தியக் கூறுகள்

சீமேந்திற்கும் கண்ணுடித் தொழிலுக்கும் வேண்டிய மண்ணையும், சுண்ணும்புக் கல்லையும் தவிர வரண்ட பிரதேசத்தின் மண்ணியல் ஆராய்ச்சி நிறைவுறும் வரை உலோகங்களை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் சாத்தியக்கூறுகள் பற்றித் துணிவது பயனற்றதாகும். கற்பிட்டி தொடக்கம் மன்ஞர், யாழ்ப்பாணம் முல்லைத்தீவு ஓரமாக உள்ள சுண்ணும்புக் கற்பாறைகள் உயர்ந்த ரகமானவை. போதியளவில் அவை கிடைப்பதனுல் நீண்டகாலத்திற்குச் சீமேந்துக் கைத்தொழிலை மேற்கொள்ளலாம். அடம்பன், குடத்தனை, அரியாலை போன்ற இடங்களிலே உள்ள மண் கண்ணுடித் தொழிலுக்கு மிகவும் உகந்தவை.

புல்மோட்டைக்கும் கொக்கிளாய்க்குமிடையிலே கடற்கரை ஓரமாக 40 இலட்சம் தொன் அல்லது அதற்கு மேற்பட்ட இல்மனைட் இருக்கின்றது. கிழக்கு மாகாணத்திலேயும் இல்மனைட் இருக்கின்றது. எடுத்துக்காட்டாக திருக்கோயிலில் 500 ஆயிரம் தொன் இல்மனைட் இருக்கின்றது. இல்மனைட்டை அடிப்படையாகக் கொண்டு வாணிஷ் போன்றவற்றைத் தயாரிக்கலாம். இப்பொழுது இலங்கை இல்மனைட்டைப் பதனிடாது ஏற்றுமதி செய்கின்றது. அவ்வாறு செய்வோமாயின் இந்நாட்டிற்குக் கூடுதலான அந்நிய செலாவணியைப் பெறலாம். குதிரைமலை முனை போன்ற இடங்களிலே மனசைட்டைப் பெறலாம் இவற்றினை ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நிய செலாவணியைச் சம்பாதிக்கலாம்.

கெப்பிட்டி கொலாவுக்கு அண்மையிலும் வவுனியாவுக்கு குளத்திலும் காரீயம் இருக்கின்றது. அதனை அகழ்ந்தெடுத்து ஏற்றுமதி செய்யலாம்.

முல்லைத்தீவுக் கண்மையில் இரும்புக் கனிப் பொருள் இருக்கின்றது. வருங் காலத்திலே இலங்கையில் எஃகுத் தொழிலுக்கு இது பயன்படும்.

வடபகுதியிலே இருக்கக் கூடிய பெற்ரூேல் போன்ற எரிபொருள் போன்றவற்றைப்பற்றிய திட்டவட்டமான விபரங்களை விரைவில் அறியலாம். [வளரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமை துன்பத்தில் உற்றதே!

— அரியாலையூர், வே. ஐயாத்துரை —

கொட்டுகொட் டென்றுநீர் கொட்டினுய் — பெரும்
கோரச் செயல்களைச் செய்துளாய் — ஐயோ
நட்டத்தை மேலும் நீ காட்டினுய் — ஈழ
நாட்டினி லேனிந்தக் கோபமா?

மக்களைத் துன்பத்துள் ஆக்கினுய் — ஏழை
மக்களின் இல்லத்தைத் தாக்கினுய் — உன்றன்
பக்குவத் தாலுய்த பச்சைகள் — வீழ்ந்து
பாழ்பட்டுப் போகவும் செய்தாயே!

நீயின்றி வாழ்வமை யாதென்றே — மக்கள்
நேசத்தைக் காட்டுவர் உன்னிலே — ஐயோ
பேயென்றும் பேசவும் செய்தாயே — உன்றன்
பெற்றியி லேனின்று குன்றினை.

பூரித்துப் பொங்கலைப் பொங்கவும் — மண்ணிற்
போட்டதின் லாபத்தைக் காணவும் — இன்று
சீரற்றுப் போனதே என்செய்வோம் — துன்பச்
சேற்றினை ஏன்மழை தந்தனை.

தெய்வத்திற் சிந்தனை அற்றதோ — இந்தத்
தேசத்தில் தீமைகள் சேர்ந்ததோ — மக்கள்
உய்தற்கு ஓர்வழி இல்லையோ — நாட்டின்
ஒற்றுமை துன்பத்தில் உற்றதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கூட்டுறவுக் கல்லூரி
## கூட்டுறவுப்பணியாளர் தராதரப் பத்திரம்
## கனிஷ்ட பிரிவு, ஐப்பசி, 1969
## பரீட்சை முடிவுகள்

**சித்தியடைந்தோர்**

1. பொ. கேதாரநாதன்
2. மூ. தங்கவேல்
3. சி. இலட்சுமன்
4. சு. பத்மநாதன்
5. செ. துரைராசா
6. ச. ஆனந்தராசா
7. சி. சுபத்திரா
8. மு. மகேந்திரராசா
9. வி. கோபாலகிருஷ்ணன்

**நூனசித்தி அடைந்தோர்**

1. சு. கணேசலிங்கம் (கணக்கியல், நிருவாகம்)
2. வ. பாலசிங்கம் (கணக்கியல்)
3. பொ. செல்வராசா (கணக்கியல், நிருவாகம்)
4. க. தவப்பிரகாசம் (கணக்கியல்)
5. நா. தியாகராசா (கணக்கியல்)
6. சு. சண்முகநாத ஐயர் (கணக்கியல், நிருவாகம்)
7. இ. சரவணபவானந்தன் (கணக்கியல், நிருவாகம்)
8. செ. சற்குணநாதன் (கணக்கியல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் பிரிவு, ஐப்பசி, 1969
# பரீட்சை முடிவுகள்

**சித்தியடைந்தோர்**

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.............

1. வீ. புஷ்பராசா
2. பெ. நடராசா
3. தே. க. ஜெயபாலன்
4. க. கணேசபிள்ளை

**நூனசித்தி அடைந்தோர்**

1. த. இந்திராணி (கணக்கியல் 1, கணக்கியல் 11)
2. பொ. பிறேமகாந்தா (கூட்டுறவு, பொருளாதாரம்)
3. மு. அ. அப்துல்றசாக் (பொருளாதாரம், எண்பார்வை)
4. சி. சி. சுப்பிரமணியம் (கணக்கியல் 1, நிருவாகம்)
5. சி. சிவநாதன் (கணக்கியல் 1, நிருவாகம்)
6. இ. யோகராணி (பொருளாதாரம் கணக்கியல் 1, நிருவாகம்)
7. த. சன்முகநாதன் (கூட்டுறவு, கணக்கியல் 1, கணக்கியல் 11)

---

## உருளைக்கிழங்கு அழுகாதிருக்க

உருளைக்கிழங்கு அழுகிப் போவது உருளைக் கிழங்கினைப் பயிரிடும் விவசாயிகளுக்கு ஒரு பிரச்சினையாக இருந்து வருகின்றது. இக் கிழங்கு அழுகுவதன் காரணத்தை அறிய வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம் மத்திய கிருஷிக ஆராய்ச்சி ஸ்தாபனத்துடன் தொடர்பு கொண்டது. உருளைக்கிழங்கு நன்கு முற்றி விளைய முன்பு அறுவடை செய்வதால் தான் அது அழுகிப் போகின்றது என்று மேற்படி நிலையத்தில் செய்த ஆராய்ச்சி மூலம் தெரிய வந்தது. அறுவடை செய்த பின்பு உருளைக்கிழங்கை மணலிலுள்ள நிழலான இடங்களில் பரப்ப வேண்டும். இதனால் கிழங்கிலுள்ள ஈரம் உலர்ந்து அதன் தோல் வைரித்து பதமுள்ளதாக விளங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பணத்தை
# உங்கள் கூட்டுறவு மாகாண வங்கியில்
# சேமியுங்கள்

**நிலைச் சேமவைப்பு:**

12 மாதங்களுக்குரிய நிலையான வைப்பிற்கு 4%

5 வருடங்களுக்கும் அதற்குமேலும் உள்ள நிலையான வைப்பிற்கு ... 5%

10 வருடங்களுக்கும் அதற்குமேலும் உள்ள நிலையான வைப்பிற்கு $5\frac{1}{2}$%

**சேமவைப்பு:** $3\frac{3}{4}$% வட்டி கொடுக்கப்படும்.

இவ்வைப்பிலிருந்து நாளாந்தம் பற்றுவரவு செய்வதற்கு வசதியுண்டு. கூட்டுறவுச் சங்கங்களின் சேமிப்பிற்கு $4\frac{1}{2}$% வட்டி கொடுக்கப்படும். ஸ்தாபனங்களின் சேமிப்பிற்கு, மிகக்குறைந்த மிச்ச இருப்பு ரூ. 5000/- மாக இருக்கும் மாதங்களுக்கு 4% வட்டி கொடுக்கப்படும்.

**பத்து வருட சேமிப்புப்பத்திரங்கள்:**

6% வட்டி கொடுக்கப்படும்.

**மாதாந்த தொடர் சேமிப்பு:** வட்டி 6%

இச்சேமிப்புத்திட்டத்தின்கீழ் 60 மாதங்களுக்கும், 81 மாதங்களுக்கும், 120 மாதங்களுக்கும் சேமிப்பு ஏற்றுக்கொள்ளப்படும். ஆகக்குறைந்த தொகை ரூ. 1/-. ரூ. 1/- மாதம் மாதம் சேமிப்பவர். 60 மாதங்களின் பின் ரூ. 70/- பெறுவார். 81 மாதங்களின் பின் ரூ. 100-/ பெறுவார். 120 மாதங்களின் பின் ரூ. 163/- பெறுவார்.

**நகை அடைவுபிடித்தல்:**

நகை அடைவுபிடித்தல் வங்கியின் எல்லாக்கிளைகளிலும் நடைபெறுகின்றது. $10\frac{1}{2}$% வட்டி. பகுதிபகுதியாகவும் பணத்தைச் செலுத்தலாம்.

## யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி

**கிளைகள்:**

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பரந்தன்
சங்கானை சுன்னாகம் ஊர்காவற்றுறை
பருத்தித்துறை (நெல்லியடி) வலி-கிழக்கு (ஆவரங்கால்)

தலைமைக் காரியாலயம்:

**59, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோருக்கும் "பென்சன்"!

'வசதிக்கேற்ப பணம் கட்டும்

தேசிய உபகாரச் சம்பளக் காப்புறுதிப் பத்திரம்

ஒன்று வாங்குங்கள்.

நீங்கள் என்ன ஊழியம் செய்பவராக இருப்பினும் எவ்வளவு ஊதியம் பெறுபவராக இருப்பினும் உங்கள் ஒவ்வொருவருக்கும் உதவிபுரியும் திட்டமிது. காப்புறுதித் தவணைக் கட்டணத்தை ஒழுங்காகக் கட்ட வேண்டுமென்ற கட்டாயமில்லை; வசதிப்படி, வசதியான நேரத்தில் கட்டலாம். இவ்வாறு சிறு சிறு தொகைகளைக் கட்டி வயோதிபக்காலத்தில் கவலையின்றி வாழ்வதற்கு வழி செய்து கொள்ளுங்கள். வேண்டுவதெல்லாம், ஒரு பிரேரணைப் பத்திரம், பிறப்புச் சான்றுப்பத்திரம் என்பன மட்டுமே. வைத்தியப் பரிசோதனை கூடத் தேவையில்லை.

**விவரங்களுக்கு :**

**இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்**

288, யூனியன் பிளேஸ்,

**கொழும்பு 2**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org